அலகு ரீதியான வினா விடைத் தொகுப்பு

# எமது கீர்த்தி மிக்க அரசர்கள்

வரலாறு | தரம்-07 | அலகு-02

1. அநுராதபுரத்தை நீண்டகாலம் ஆட்சி செய்த வம்சத்தினரைக் குறிப்பிடுக?
   - இலம்பகர்ண,மௌரிய
2. மானவர்ம மன்னனின் தந்தை யார்?
   - இரண்டாம் காசியப்பன்
3. இரண்டாம் காசியப்ப மன்னன் கி.பி. 650லிருந்து எத்தனை வருட காலம் ஆட்சி செய்தான்?
   - 09 ஒன்பது ஆண்டுகள்
4. இந்தியாவிற்கு தப்பிச்சென்ற மானவர்ம மன்னன் பல்லவ மன்னனுக்கு விசுவாசமாக இருந்தான், அப்போது இருந்த பல்லவ அரசின் மன்னன் யார்?
   - முதலாம் நரசிங்க வர்மன்
5. முதலாம் நரசிங்க வர்மன் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு படையெடுத்து வந்து எம்மன்னனோடு போர் புரிந்தான்?
   - இரண்டாம் தாடோபதீசன்
6. இரண்டாவது தடவையாக மானவர்ம மன்னன் இந்தியாவிலிருந்து படையெடுத்து வந்து எம்மன்னனை போரில் வெற்றி கொண்டான்?
   - ஹத்தாட மன்னன்
7. மானவர்ம மன்னன் அநுராதபுரத்தை எத்தனை வருடம் ஆட்சி செய்தான்?
   - 35 ஆண்டுகள்
8. மரபுரீதியான ஆட்சிமுறை எம்மன்னனது காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது?
   - மானவர்ம மன்னனின்
9. மானவர்ம மன்னனின் **வம்சம்** எத்தனை வருடங்கள் அநுராதபுரத்தை ஆட்சி செய்தது?
   - 300 ஆண்டுகள்
10. முதலாம் சேனன் எவ்வம்சத்திற்குரிய மன்னனாவான்?
    - மானவர்ம வம்சம்
11. முதலாம் சேன மன்னனின் தந்தை யார்?
    - இரண்டாம் தப்புல மன்னன்
12. இரண்ராம் தப்புல மன்னனின் ஆட்சிக்காலம் எத்தனை வருடங்களாகும்?
    - 16 வருடங்களாகும்
13. முதலாம் சேன மன்னனுக்கு முன் ஆட்சி செய்த அவனது சகோதரன் யார்?
    - 9 ஆம் அக்கபோதி
14. முதலாம் சேன மன்னனின் ஆட்சிக்காலம் எத்தனை வருடங்களாகம்?
    - 20ஆண்டுகள்
15. முதலாம் சேன மன்னனை தோற்கடித்த பாண்டிய மன்னன் யார்?
    - ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன்
16. பாண்டிய மன்னனின் படையுடன் போரிட்டு இறந்த சேனமன்னனின் சகோதரர்கள் யாவர்?
    - மகிந்தன்,காசியப்பன்
17. இரண்டாம் சேன மன்னனின் ஆட்சிக்காலம் எத்தனை வருடங்கள்?
    - 35 ஆண்டுகள்
18. பாண்டிய நாட்டை ஆக்கிரமித்து, பாண்டியர் அபகரித்துச் சென்ற சொத்துக்களை மீண்டும் இலங்கைக்கு கொண்டு வந்த மன்னன் யார்?
    - இரண்டாம் சேன மன்னன்
19. இரண்டாம் சேன மன்னனிடம் உதவி கோரிய பாண்டியநாட்டு இளவரசர் யார்?
    - இரண்டாம் வரகுணவர்மன்

M.B.M SAMRI

20. இரிபின்னியாவ எனும் இடத்தில் கிடைத்த கல்வெட்டில் குட்டா செனவிரதாணன் எனும் தளபதி யார்?
    - குட்டக தளபதி
21. அநுராதபுரத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த அரசுரிமை இரண்டையும் குறிப்பிடுக
    - தந்தைக்குப்பின் மகன்
    - மூத்த சகோதரனுக்குப் பிறகு இளைய சகோதரன்
22. புதிதாக அரசுரிமையை பெற்று தமது பொறுப்புக்களை சட்டரீதியாக பொறுப்பெடுக்கும் சந்தர்ப்பம் எவ்வாறு அழைக்கப்படும்?
    - பட்டாபிசேகம்
23. எதிர்கால அரசனாகும் உரிமையை பெற்றவன் எவவ்வாறு அழைக்கப்படுவான்?
    - யுவராஜன்
24. குதிரைகள் குறித்த விடயங்களுக்கு பொறுப்பான அதிகாரி?
    - அஷஅதெக (குதிரை பரிபாலகர்)
25. யானைகள் குறித்த விடயங்களுக்கு பொறுப்பாக இருந்தவர?
    - அதி அதிக (யானை பரிபாலகர்)
26. ரட அல்லது ரட்த ஆட்சிப்பகுதிகளுக்கு பொறுப்பான அதிகாரி?
    - ரட்லது / ரட்டலத்தன்
27. ஆரம்பக்காலத்தில் கிராமத்தை நிர்வகித்தவர்?
    - கமிக
28. பின்னரை காலத்தில் கிராமத்தை நிருவகித்தவர்?
    - கம்லத்தன்
29. கி.பி.10ஆம் நுற்றான்டிற்குரிய சட்ட திட்டங்கள் குறித்து குறிப்பிடப்படும் கல்வெட்டு எது?
    - வேவல்கெட்டிய
30. அநுராதபுர யுகத்தின் மன்னர்கள் உயர் அதிகாரி சில நபர்களுக்கும் உள்ள சிஷேட அதிகாரங்களையும் வரப்பிரசாதங்களையும் குறித்து அமைக்கப்பட்ட தூண் எது?
    - அந்தானி தூண்
31. அநுராதபுர யுகத்தில் அடிப்படை முகாமைத்துவம் தொடர்பாக நான்காம் மகிந்தனால் பொறிக்கப்பட்ட சுவர்க் கல்வெட்டு எது?
    - மிகிந்தலை சுவர்க்கல்வெட்டு
32. அநுராதபுர யுகத்தின் பின்னரைப்பகுதியில் விகாரையின் செயற்பாடுகள் அன்றாட செலவினங்கள் தொடர்பாக புரியுக் புத்தகம்?
    - பஞ்ஷிகா (கணக்குப் புத்தகம் )
33. சகல பத்து கிராமங்களுக்கு ஒவ்வொரு வைத்தியர் வீதம் நியமித்து வைத்தியம் செய்வித்த மன்னன்?
    - புத்தசாச மன்னன்
34. பார்வை இழந்தவர்களுக்கும் நோயாளிகளுக்கும் வைத்தியசாலை தானசாலைகளை நிறுவிய மன்னன் யார்?
    - முதலாம் உபதிஸ்ஸ மன்னன்
35. பொலன்னறுவையிலும் பதவியாவிலும் வைத்தியசாலையை தானசாலைகளை நிறுவிய மன்னன்?
    - முதலாம் உதயன்
36. தொற்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு அநுராதபுரத்தில் வைத்தியசாலையை சிகிச்சை நிலையங்களை நிறுவிய மன்னன்?
    - ஐந்தாம் காசியப்ப மன்னன்
37. புாண்டிய அரசின் தலைநகரம் எது?
    - மதுரை
38. பல்லவ இராச்சியத்தின் தலைநகரம் எத?
    - காஞ்சியுரம்
39. எம்மன்னனின் காலப்பகுதியில் அநுராதபுர யுகம் வீழ்ச்சி கன்டது?
    - ஐந்தாம் மகிந்தன்
40. அநுராதபரத்தை ஆக்கிரமித்த சோழப் பேரரசன்?
    - இராஜராஜன்

M.B.M SAMRI

41. சோழர்களிடமிருந்து இலங்கையை மீட்டெடுத்த மன்னன்?
    - முதலாம் விஜயபாகு மன்னன்
42. முதலாம் விஜயபாகு மன்னன் சிறுவயதில் எப்பெயரில் அழைக்கப்பட்டான்?
    - கீர்த்தி / கித்தி
43. மகா விஜயபாகுவின் தந்தையின் பெயர்?
    - மஹாசாமி மொக்கல்லான
44. மகா விஜயபாகுவின் தாய்?
    - யோகிதா தேவி
45. பனாகடுவ செப்பேட்டில் எந்த சேனாதிபதியின் சேவை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது?
    - சித்தாரும்பி புத்தராஜ
46. மகா விஜயபாகு மன்னன் அவனது குடுக்பத்துக்கு பாதுகாப்பு வழங்கியர்?
    - சித்தாரும்பி புத்தராஜ
47. முதலாம் விஜயபாகு எந்த மன்னனை தோற்கடித்து ஆட்சிபீடமேறினான்?
    - கேசதாது காசியப்பன்
48. சோழர்களிடம் தோல்வியடைந்த விஜயபாகு மன்னன் பாதுகாப்பிற்காக சென்ற இடம்?
    - வாக்கிரிகளை (கேகாலை)
49. சோழர்கள் ஆட்சி காலம் எத்தனை வருடம?
    - 77 வருடங்கள்
50. மகா விஜயபாகுவின் ஆட்சி காலம்?
    - 40 வருடங்கள்
51. பாண்டிய இளவரசனுக்கு மனமுடித்துக் கொடுத்த மகா விஜயபாகுவின் சகோதரி?
    - மித்தா
52. மகா விஜயபாகுவின் இரண்டாவது மனைவியான திரிலோகசுந்தரி எந்த வம்சத்தை சேர்ந்தவள்?
    - கலிங்க வம்சம்
53. புத்தசான வளரச்சிக்காக மகா விஜயபாகு மன்னன் எந்த நாட்டுடன் தொடர்பு கொண்டான்?
    - பர்மா
54. மகா விஜயபாகு மன்னனால் சமய நடவடிக்கைகள் தொடர்பாக பொறிக்கப்பட்ட கல்வெட்டு?
    - அம்பகமுவ கல்வெட்டு
55. மகா பராக்கிரமபாகுவின் தந்தை?
    - மானாபரணன்
56. பராகிரமபாகுவின் தாய்?
    - இரத்னாவளி
57. மகா பராக்கிரமபாகுவின் சிறிய தந்தை?
    - கீர்த்தி ஸ்ரீ மேவன்
58. மாாபரணுக்கு பின் தக்கின தேசத்துக்கு அரசனானவ மன்னன்?
    - கீர்த்தி ஸ்ரீ மேவன்
59. பராக்கிரபுரத்தின் தற்போதைய பெயர்?
    - பண்டுவஸ்நுவர
60. இரண்டாம் மானாபரனுக்கு பின் படைக்கு தலைமை தாங்கிய அவனது தாய் யார்?
    - சுகலா தேவி
61. பராக்கிரம சமுத்திரத்தை உருவாக்கியவன்?
    - பராக்கிரமபாகு
62. கி.பி 1164 ஆம் ஆண்டு பர்மாவை ஆக்கிரமித்த கடற்படையின் தளபதி?
    - நகரகிரி கீர்த்தி
63. வானிலிருந்து விழும் ஒரு துளி நீர் வீனாக கடலை சென்றடையக்கூடாது எனக் கூறிய மன்னன?
    - மகா பராக்கிரமபாகு
64. எம்மன்னனை கொண்று நிச்சங்கமல்ல மன்னன் ஆட்சி பீடமேறினான்?
    - மகிந்த
65. நிஸ்ஸங்கமல்லன் எவ் வம்சத்தை சேர்ந்தவன்?
    - கலிங்க வம்சம்

M.B.M SAMRI

66. நிஸ்ஸங்கமல்லனின் தாய்?

- பார்வதி தேவி

67. பொலன்னறுவையை "கலிங்கபுரம்" என அறிமுகப்படுத்திய மன்னன்?

- நிச்சங்கமல்லன்

68. ஒருவரின் உடல் நிறைக்கு சமனான வழங்கப்படும் கொடை?

- துலாபாரக்குடை

69. துலாபாரக் கொடை வழங்கிய மன்னன்?

- நிஸ்ஸங்கமல்லன்

70. நிஸ்ஸங்கமல்லனின் ஆட்சிக்காலம்?

- 9 வருடங்கள்

71. மிக நீளமான கல்வெட்டு எது?

- கல்பொத்த கல்வெட்டு

72. கல்பொத்த கல்வெட்டு எம்மன்னால் வெட்டப்பட்டது?

- நிஸ்ஸங்கமல்லன்

73. ரன்கொத் விகாரை எம்மன்னனால் நிர்மானிக்கப்பட்டது?

- நிஸ்ஸங்கமல்லன்

M.B.M SAMRI